---

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் ("சபை") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தொழில்சார் கட்டணங்களின் ரூபா 299,793,009 தொகையான கணக்கீட்டு அறவீடுகள், தொழில்சார் கட்டணங்களின் ரூபா 386,839,872 தொகையான கொடுப்பனவு, தொழில்சார் கட்டணங்கள் மீதான ரூபா 12,047,910 தொகையான நிறுத்தி வைத்தல் வரி அறவீடுகள் முதலியவற்றுக்கான பேரேட்டு கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக தொழில்சார் கட்டணங்களின் அறவீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தொழில்சார் கட்டணங்களின் அறவீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தொழில்சார் கட்டணங்களின் மீது அறவிடப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி என்பன தொழில்சார் கட்டணம் என பெயரிடப்பட்ட ஒரு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. அதேநேரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறிப்பிடப்பட்ட கணக்கின் இனங்காணப்படாத வரவு மீதி ரூபா 112,663,449 தொகை வைத்தியசாலைக் கட்டணக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் இருந்து தொழில்சார் கட்டணங்களை முறையான விதத்தில் துல்லியமாக கணக்கீடு செய்யும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன மற்றும் கணக்கீட்டு முறைமையிலும் சிஸ்டாலிக் (Systolic) தகவல் முறைமையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அறவீடு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணங்கள், கொடுப்பனவு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணங்கள், கொடுப்பனவு செய்யப்பட்ட தொழில்சார் கட்டணங்கள் மற்றும் தொழில்சார் கட்டணங்கள் மீது அறவீடு செய்யப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி என்பவற்றிற்கான பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 | | |
| (i) நியமத்தின் 95(இ) பந்தியின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உரிய மூலதனத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,280,000 தொகையான மூலதன ஒதுக்கத்தின் தன்மை மற்றும் நோக்கம் என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மோட்டார் வாகனத்தின் மீள் மதிப்பீட்டிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு ஒதுக்கம் இந்த ஒதுக்கத்தினால் காட்டப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சரியாக சரி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் மூலதன வேலையாகிய ரூபா 689,609,072 தொகையினை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பொதுவாக, தொடர்புடைய திகதியில் உள்ளவாறான நடைபெறும் மூலதன வேலையின் திரண்ட கிரயமானது, நடைபெறும் மூலதன வேலையின் பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டது. மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகளை விசேடமாக வெளிப்படுத்துவதற்கு அவசியம் இல்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நடைபெறும் மூலதன வேலையினை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையினை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47ஆம் பந்தியின் பிரகாரம், வழு இடம்பெற்ற காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட ஒப்பிடக்கூடிய தொகைகளை மீள எடுத்து வைப்பதன் மூலம் அவற்றை கண்டுபிடித்து, கடந்த கால பொருண்மையான வழுக்களை நிதிக்கூற்றுக்களின் முதல் தொகுப்பில் பின்னோக்கிய நடைமுறையில் சரிசெய்யப்பட வேண்டும். இவ்வாறு செய்யாமல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் திரண்ட பற்றாக்குறை மற்றும் கடந்த | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்ட வழு திருத்தம் செய்யப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் சரிசெய்தல்கள் என நிதிநிலைமைக் கூற்றின் உருப்படிகளுக்கு ரூபா 50,109,965 தொகை சரிசெய்யப்பட்டு இருந்தது. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், ரூபா 2,225,037,613 கிரயமான நடைமுறை அல்லா சொத்துக்கள் முற்றாக தேய்மானமாகியிருந்த போதிலும், அவை இன்னும் பயன்பாட்டில் உள்ளன. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் அதன் மேல் ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழுவினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட சொத்துக்களை மீள் மதிப்பீடுசெய்வதற்கு பெரும் செலவு செய்ய வேண்டி ஏற்படும். இது நிறுவனத்திற்கு மேலதிக சுமை ஆவதுடன் திரண்ட நிதி மதிப்பொன்று இல்லாததால் எந்த சிறப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆனால் இன்னும் பயன்பாட்டில் உள்ள நடைமுறையல்லா சொத்துக்களின் கணக்கீடு மற்றும் மீள் மதிப்பீடு செய்வது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,412,150 தொகையான அட்டுறு செலவுகள் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் வழுவை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆண்டுடன் தொடர்பான அனைத்து கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவுகளும் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் வழங்குனர்களிடம் இருந்து 10 மற்றும் 14 சந்தர்ப்பங்களில் கழிப்பனவு செய்வதன் மூலமான அபராதங்களின் வருமானம் முறையே ரூபா 2,875,084 மற்றும் ரூபா 4,645,974 தொகைகள், உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாமை காரணமாக கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் வழுவை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கின்ற போது கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காண்பதற்கும், கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கும் மற்றும் குறிப்பிட்ட வழுக்களை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 16 நிர்மாணிப்பு ஒப்பந்தங்களின் கொடுப்பனவுகளில் இருந்து கழிக்கப்பட்ட பிடிபணம் ரூபா 31,832,324 தொகையானது கணக்குகளில் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் வழுவை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்காண்பதற்கும் கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கும் மற்றும் வழுவை நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் தொழில்சார் கட்டணங்களில் இருந்து கழிப்பனவு செய்யப்பட்டதும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியதுமான நிறுத்திவைத்தல் வரி ரூபா 1,943,110 தொகை கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதுபோன்ற காலங்கடத்துதலை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆண்டு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை அட்டுறு அடிப்படையில் துல்லியமாக இனங்காண்பதற்கும் கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த வழுக்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு தொடர்பான விடுதிக் கட்டணங்கள் மீதான பெறுமதிசேர் வரி ரூபா 7,787,448 தொகையால் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கலாக கருதி 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கின்ற போது நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்களை துல்லியமாக இனங்கண்டு கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கடந்த ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் வைத்தியசாலை கட்டணங்கள் கட்டுப்பாட்டு கணக்கின் 31 திசெம்பரில் உள்ளவாறான வரவு மீதிகள் முறையே ரூபா 16,271,838 மற்றும் ரூபா 18,013,133 தொகைகளின் ; | வைத்தியசாலை கட்டண கட்டுப்பாட்டு கணக்கினுள் உள்ளிடப்பட்ட விடயங்கள் சரியான நேரத்தில் இணக்கம் செய்யப்படவில்லை. | கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பலவீனங்கள் சரிசெய்யப்பட வேண்டும். முறைமைக்கு தரவுகளை உள்ளீடு செய்தல், தரவுகளை பரிமாற்றல் மற்றும் நீக்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | வரவு மீதிகளுக்கான காரணங்களை இனங்கண்ட பின்னர் அவசியமான சீராக்கங்களை மேற்கொள்ளாமல் விடுதி கட்டணங்கள் வருமான கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டு முதல், அத்தகைய வழுக்களை தவிர்ப்பதற்கு வைத்தியசாலை கட்டணங்கள் கட்டுப்பாட்டு கணக்கை மாதாந்தம் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | என்பவற்றுக்கு பின்பற்ற வேண்டிய பொருத்தமான நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும், 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | வைத்தியசாலை கட்டணங்கள் சேகரிப்பிற்கான வருமான கணக்கின் காசுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 4,202,876 தொகை துல்லியமான இனங்காணப்படாடல் விடுதிக் கட்டணங்கள் வருமானக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | அத்தகைய வழுக்கள் இடம் பெற்றிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாளுக்கு நாள் கையிலுள்ள காசுக்கணக்கிற்கு நாளாந்தம் மாற்றம் செய்யப்படும் தரவுகளின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணினி முறைமையிலிருந்து இறக்கம் செய்யப்பட்ட தரவுகளுடன் நாளாந்தம் கையிலுள்ள காசுக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட தரவுகளை ஒப்பீடு செய்து துல்லியத்தன்மையானது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு ரூபா 334,611,222 இனுள் உள்ளடக்கப்பட்ட காலாவதியான கையிருப்பின் கிரயம் ரூபா 2,948,800 இனை இலாபத்திற்கு எதிரே பதிவழிக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கு பதிலாக காலாவதியான கையிருப்பிற்கு ரூபா 6,692,224 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏற்பாட்டிற்கான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. கையிருப்பினை கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதி ஆகியவற்றில் எது குறைந்ததோ அதனை மதிப்பீடுசெய்து கணக்கீடுகளில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற போதிலும், நிகர தேறத்தகு பெறுமதியை கருத்திற் கொள்ளாமல் கணக்குகளில் கிரயம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | காலாவதியான மற்றும் சேதமடைந்த கையிருப்புக்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்த தவறியிருந்தது.<br><br>வைத்தியசாலைக்கு உரித்துடைய கையிருப்பு உருப்படிகளின் நிகர தேறத்தகு பெறுமதியினை மதிப்பிடுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அனைத்து கையிருப்புக்களும் வரலாற்று கிரயத்தில் பெறுமதியிடப்பட்டன மற்றும் நிதிக்கூற்றுக்களின் | காலாவதியான கையிருப்பு தொடர்பான கிரயத்தை சரியாக இனங்கண்ட பின்னர் முறையான அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கான நடவடிக்கைககள் எடுக்கப்பட வேண்டும்.<br>கையிருப்புக்கள் கிரயம் மற்றும் நிகர தேறத்தகு பெறுமதி ஆகிய இரண்டிலும் எது குறைவானது என மதிப்பீடு செய்வதுடன் மற்றும் அவற்றை கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். காலாவதியான கையிருப்புக்களின் ஏற்பாட்டிற்கான கொள்கை கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கின்ற போது இந்த வழு சரிசெய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளிப்படுத்தல்களில் கையிருப்பு கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதியில் எது குறைவானதோ அந்தப் பெறுமதியில் பெறுமதியிடப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்த கூற்று சரியானது அல்ல என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | |
| (ஐ) | கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் சிறுவர்கள் வைத்தியசாலைகளின் நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வைத்தியசாலை கட்டணங்கள் ரூபா 1,220,216 தொகையானது கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படாமல் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது வழுவை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் துல்லியமாக இனங்கண்டு கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | ஆய்வுகூட வளாகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் தொடர்பில் மீளளிப்பு செய்யப்பட்ட பணம் பா 1,351,526 தொகையானது மூலதனமாக்கல் செய்யப்படாமல் கட்டிட பழுதுபார்த்தல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது வழுவை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்களை துல்லியமாக இனங்கண்டு கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 2016 ஆம் ஆண்டில் அகற்றல் செய்யப்பட்ட உபகரணங்கள் 3892 அலகுகளின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம், கடந்த ஆண்டு ரூபா 4,391,608 இல் விற்பனை செய்யப்பட்ட மருத்துவ உபகரணம், மின் உயர்த்திகள், மின்உற்பத்தி இயந்திரங்கள், கட்டிடப் பொருட்கள், தளபாடம், சக்கர நாற்காலிகள், மற்றும் ஏனைய உபகரணங்கள், மீளாய்வாண்டில் ரூபா 638,100 இல் விற்பனை செய்யப்பட்ட மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. எவ்வாறெனினும், விற்பனையின் வருமானம் இலாபமாக அங்கீகரிக்கப்பட்டது ஏனென்றால் அகற்றப்பட்ட பொருட்களின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானத்தினை தனியாக அடையாளம் காண்பதற்கு சிரமமாக | நடைமுறையல்லா சொத்துக்களின் அகற்றலுடன் தொடர்புடைய இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கின்ற போது இந்த வழு சரிசெய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள், கட்டிட மற்றும் அலுவலக உபகரணங்கள், மின் சாதனங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் என்பன கணக்குகளில் இனங்காணப்பட்டு பதிவழித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. | இருந்தது. | |
| (ஔ) | ரூபா 5,608,800 கிரயத்தையுடைய மற்றும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அகற்றல் செய்யப்பட்ட 3 கட்டிடங்கள் தொடர்பான திரண்ட தேய்மானம் கணக்குகளிலிருந்து பதிவழித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றும் மீளாய்வாண்டில் அந்த 3 கட்டிடங்கள் மீது ரூபா 112,175 தொகையானது தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கின்ற போது இந்த வழுவை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நடைமுறையல்லா சொத்துக்களின் அகற்றலுடன் தொடர்புடைய இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது இந்த வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | கணக்கீட்டு பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | திரண்ட பற்றாக்குறை | | | | | |
| | 2018 சனவரி 01 இல் உள்ளவாறு | 774 | 878 | 104 | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. அக்பெக் (Accpac) முறைமையில் சரியான திரண்ட பற்றாக்குறையை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அக்பெக் கணக்கீட்டு முறைமையின் தவறுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 707 | 824 | 117 | | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் முறைமையில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திரண்ட நிதிய கணக்கிற்கு முந்தைய ஆண்டு சீராக்கங்கள் | 50 | 54 | 4 | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. | பேரேட்டுக் கணக்கு மீதிகளுடன் நிதிக்கூற்று மீதிகளை இணக்கம் செய்வதற்கு கவனிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நானாவித வைப்புக்கள் | 4,339,582 | நாளாந்த வைப்புக்கள் தொடர்பான பதிவேடுகள் 21 வருடங்களுக்கு மேல் பழமையானது. | அவை 1984 முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் வைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் வைப்புக்களை செய்த நபர்களையும் பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தொடர்புடைய தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்துவதற்கு அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலவாக பதிவழிப்பு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது தொடர்பான தகவல்களை கண்டுபிடிக்க சாத்தியமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். கண்டுபிடிக்க முடியாத மீதிகள் முறையான அங்கீகாரத்தை பெற்று கணக்குகளில் இருந்து பதிவழிப்பு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை விமான படையினரிடம் இருந்து பெறவேண்டிய வைத்தியசாலை கட்டணங்கள் | பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பெறவேண்டிய மீதிகளை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்கள் 113(3) பிரகாரம் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தையும் திறைசேரி |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 2,438,514 மற்றும் ரூபா 1,698,819 என்பன முறையான அங்கீகாரம் பெற்று மீள அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செயலாளரின் அங்கீகாரத்தையும் பெற்று புத்தகங்களில் இருந்து பதிவழிப்பு செய்ய வேண்டும். 2016 பெப்ரவரி 12 ஆம் திகதிய பொது சுற்றறிக்கை இல் 2/2016 இன் பிரகாரம் பொது திறைசேரியின் பொது தொழில் முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு இதனை தெரிவிக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டில் பயிற்சி பெறும் வைத்தியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 1,112,280 மற்றும் சுகாதார கல்வி பல்கலைக்கழக கல்லூரியை நடாத்துவதன் காரணமாக சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிடமிருந்து பெறவேண்டியவை ரூபா 4,364,660 என்பவற்றை 2018 திசெம்பர் 31 வரைக்கும் கூட மீள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. பயிற்சி பெறும் வைத்தியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளத்தை மீள் நிரப்புவதற்கு அமைச்சுக்கு ஒரு நினைவூட்டல் அனுப்பப்பட வேண்டும். சுகாதார கல்வி பல்கலைகழகக் கல்லூரியை நடத்துவதுடன் தொடர்புடைய செலவுகளை அதன் சொத்துக்களை வைத்தியசாலைக்கு உடைமையாக்குவதன் மூலம் மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பயிற்சி பெறும் வைத்தியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிடமிருந்தான சுகாதார கல்வி பல்கலைக்கழக கல்லூரியை நடத்துவதுடன் தொடர்புபட்ட செலவுகளை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1997, 1998, 2008, 2009, 2010 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புபட்ட 4 நிறுவனங்களிடமிருந்து மீள பெறவேண்டிய ரூபா 78,876 தொகையான மின்சார கட்டணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் கூட மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. முன்னைய ஆண்டு தொடர்பாக வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகளிடம் இருந்து பெறவேண்டிய மின்சார பட்டியல்கள் பெறவேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. மற்றும் அவை இன்னும் பெறவேண்டியவையா என்பதை சரிபார்ப்பதற்கு எழுத்துமூலமான சான்றுதல் எதுவும் இருக்கவில்லை. ஆகையினால், பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் புத்தகங்களில் | இந்த விடயம் தொடர்பாக எழுத்து மூல சான்றுகளை கண்டுபிடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இது பயனுள்ளதாக இல்லாவிட்டால் முறையான அங்கீகாரத்துடன் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | இருந்து பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். மேலும் எதிர்காலத்தில் இத்தகையை தகைமைகளை தவிர்ப்பதற்காக குறிப்பிட்ட கடமைகள் ஒதுக்கிக் கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,530,134 தொகையான நானாவித கடன்பட்டோர்களின் பதினொரு மீதிகள் ரூபா 800,907 தொகையான செயலாற்றுகை பிணை முறியின் வைப்புக்களின் ஏழு மீதிகள் மற்றும் 6 வருடங்களுக்கு மேலதி பழமையான ரூபா 3,616,142 தொகையான செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணங்கள் என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது வருமான மீதிகளாக இனங்கண்ட பின்னர் கணக்குகளில் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்பட்டது. திருப்பிச் செலுத்தப்படாதவை என இனங்காணப்பட்ட மீதிகளை கணக்குகளில் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் கொடுத்தோர்களிடம் மற்றும் நிறுவனங்களிடமிருந்தான மீதிகளை கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் அவற்றை விசாரணை செய்து உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விசாரணைக்கு கிடைத்த பதிலின் பிரகாரம் தீர்ப்பனவு செய்ய அல்லது வருமானமாக இனங்கண்டு கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களினை வெளிப்படுத்தாமை**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கான இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ முறைமையொன்றின் விநியோகம், அமுல்படுத்தல் மற்றும் வேலைக்கான ஒப்பந்தம் பணிப்பாளரொருவராகக் காணப்பட்ட சபையின் பணிப்பாளரின் மனைவியின் கம்பனியொன்றுக்கு 2015 நவம்பர் 26 இல் அளிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த கம்பனிக்கு ரூபா 17,675,727 | சுகாதார அமைச்சினால் புலனாய்வொன்று மேற்கொள்ளப் படுகின்றது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டலுக்கு முரணாக மற்றும் பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை பாதுகாத்து செயற்பட்டிராது விநியோகஸ்தரை தெரிவு செய்தமை தொடர்பில் முறையான சுதந்திரமான புலனாய்வொன்று மேற்கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. முறையானதொரு சாத்தியவள கற்கை நடாத்தப்பட்டிருக்காததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டலுக்கு முரணாக மற்றும் பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை பாதுகாத்து செயற்பட்டிராது விநியோகஸ்தர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். சபையின் தலைவரினால் நியமிக்கப்படவேண்டிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகையின் நோக்கங்களினை அடைந்து கொள்ளக்கூடியவாறு விபரக்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மோசடியான விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கமொன்றுடனான விலைமனுவை இனங்காண்பதற்கு தவறியிருந்த அதேவேளை தகைமைகளின் மதிப்பீடு மற்றும் விநியோகஸ்தரின் தகுதிநிலை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் எதிர்கால நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2004 திசெம்பர் 15 ஆந் திகதிய 06/2004 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XLVIII இன் 22.1 ஆம் உபபிரிவு | 2017 சனவரி 09 இல் இடைநிறுத்தப்பட்ட உடற்பயிற்சி நிபுணரொருவரை சேவையிலிருந்து நீக்குவதற்கு கிட்டத்தட்ட 18 மாதங்கள் காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த காலப் பகுதிக்குள் உத்தியோகத்தர்க்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று பரீட்சிப்பும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர் 2017 சனவரி 09 இல் இடைநிறுத்தப் பட்டதுடன் ஆரம்ப புலனாய்வொன்றின் பின்னர் குற்றப் பத்திரமொன்று வழங்கப்பட்டது. குற்றப் பத்திரத்தில் காணப்படும் கட்டணங்களுக்கான குற்றத்தினையும் அவர் ஒப்புக் கொண்டார், பிரிவுத் தலைவரின் அபிப்பிராயத்தைப் | தாபனக் கோவை மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்திராத மற்றும் தீர்மானங்களினை மேற்கொள்வதற்காக குறித்த காலப்பகுதிக்குள் ஒழுக்காற்று பரீட்சிப்புக்களினை நடாத்தியிராத மற்றும் பணிப்பாளர் சபைக்கு தகவலினை சமர்ப்பித்திருக்காத பொறுப்புடைய |

| | | | |
|---|---|---|---|
| | மேலும், எவ்வித சேவையையும் பெற்றுக் கொள்ளாது குறித்த காலப் பகுதிக்குள் அரைவாசி செலுத்துகையாக உத்தியோகத்தர்க்கு ரூபா 593,435 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | பெற்ற பின்னர் சேவையிலிருந்து அவர் நீக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டமையால் இறுதித் தீர்மானம் தாமதமடைந்து காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 139 ஆம் நிதிப் பிரமாணம் | சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் சான்றுறுதிப் படுத்தியிராத ரூபா 16,242,266 மொத்தப் பெறுமதியுடைய 12 உறுதிச் சீட்டுக்களுக்காக செலுத்துகை மேற்கொள்ளப் பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகளினை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்துகைக்காக காசோலைகளை எழுதுவதற்கு முன்னர் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சான்றுறுதிப்படுத்தும் உறுதிச் சீட்டுக்களுக்காக மாத்திரம் செலுத்துகைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்களின் அதிகமான தகவல்களினை உள்ளடக்கி பதிவேடொன்று தயாரிக்கப்பட்டது. அதனை முன்னேற்றும் பொருட்டு, கணனி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேடொன்றை | நிலையான சொத்துக்களுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் அவதானிப்பதற்கு இடையூறின்றி அனுகக்கூடிய கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்வனவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2001 யூலை 02 ஆந் திகதிய 02-72/2001 ஆம் இலக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பொது சுற்றறிக்கை கடிதம் | சாதாரண கடமை நேரத்தின் பின்னர் ஒழுங்கமைக்கும் மேற்பார்வை ஊழியர்களினால் தயாரிக்கப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் படிகள் செலுத்த முடியுமாகயிருந்த போதிலும், மாதிரிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் எண்ணிக்கையின் அடிப்படையில் குருதியியல் பிரிவின் (Haematololy Section) 16 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் ரூபா 179,315 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பில் புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறியப்படுத்திய பின்னர் சரிப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையினால் அனுமதியளிக்கப்பட்ட மாதிரிகளுக்காக மாத்திரம் செலுத்துகைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பதை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்வதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். இரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளுடன் தொடர்புடைய மாதாந்த அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு படிகளுக்காக விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். செலுத்தப்பட்ட மிகை செலுத்துகைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2006 மே 10 ஆந் திகதிய Q-2 84/2006 ஆம் இலக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பொது சுற்றறிக்கை கடிதம் | குருதியியல் பிரிவின் 11,970 எண்ணிக்கையான பரீட்சிப்புக்காக ரூபா 269,325 தொகையொன்று செய்யப் பட்டிருக்காததுடன் 35,203 குருதியியல் மற்றும் நுண்ணுயிர் பரீட்சிப்புக்காக ரூபா 792,067 சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் கண்டறிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு சாத்தியமான வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் படிகளாக செலுத்த முடியாது காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் அந்தப் பிரிவின் 27 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) 2018 ெப்பரவரி 15 ஆந் திகதிய சுகாதாரஅமைச்சு /சீஏ/17/2018 ஆம் இலக்க சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு செயலாளரின் நிதிக் கட்டுப்பாடுகளுக்கான கடமைப் பகிர்வு கடிதம் | தலைவர் அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது துண்டுக்கூலி விகிதம் மற்றும் விடுமுறை செலுத்துகைகளுக்கான படிகளாக மீளாய்வாண்டின் போது 36 உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை மிகைத்து ரூபா 4,278,343 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் கண்டறிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுகாதார அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், அடிப்படை மாதாந்த சம்பளத்தை மிகைத்து மேலதிக வேலை நேரம், விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் மேலதிக கடமைப் படிகளுக்கான படிகள் செலுத்தப்படக் கூடாது |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 117,086,848 இலாபத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கெதிராக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 149,619,386 ஆகவிருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 266,706,234 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 620,955,656 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ரூபா 887,661,889 ஆல் வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சராசரி வருடாந்த வைத்தியசாலை கட்டண வருமானம் ரூபா 2,000 மில்லியனிற்கு அதிகமாக இருந்த போதும், அகற்றப்பட்ட வைத்தியசாலை கட்டணங்களை தீர்மானிப்பதற்கு குறித்தவொரு | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பில் உரிய ஆலோசனையாளரால் கட்டணங்கள் பிரேரிப்பதுடன் விலைக் குழுக்களானது | விலைக்குழுவானது பல்வேறுபட்ட பரீட்சிப்பு, அறுவைச்சிகிச்சைகள் மற்றும் ஏனைய சேவைகள் போன்ற வைத்தியசாலையால் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கையொன்று இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நேரத்திற்கு நேரம் அறவிடுதலை அமுல்படுத்திருந்த போதிலும், சரியான மற்றும் நிரந்தர விலைக்கொள்கையானது அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. மொத்தக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு மிகச் சரியான விலைக்கொள்கையொன்றை ஸ்தாபிப்பதற்கு இயக்குனர் சபையால் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட விலைக் கொள்கையின் அறிமுகமானது மேந்தலைக்கிரயம் போன்ற மறைமுக கிரயங்களை இனங்காண்பதிலுள்ள கஷ்டங்களால் காலதாமதமாகிவிருந்தது. வைத்தியசாலை ஸ்தாபித்தலின் நோக்கமானது உழைத்தலாக இல்லாமையால் கிரயத்தை மேவுகை செய்ய முடியும். விலைமுறையொன்றை அறிமுகஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்பட்ட சேவைகளிற்காக கட்டணங்களை நிர்ணயிப்பதற்கும் அவற்றை நேரத்திற்கு நேரம் திருத்துவதற்கும் நியமிக்கப்பட வேண்டும். விலைக்குழுக்களின் தீர்மானத்திற்காக இயக்குனர் சபையிடம் அனுமதி பெறப்பட வேண்டும். மொத்தக் கிரயத்தை மேவுகை செய்வதற்கு விலை தீர்மானக் கொள்கையானது இனங்காணப்பட்டு அமுல்படுத்த வேண்டும். கணனி மென்பொருள் முறைமைக்குரிய விலையை கணிப்பிடுவதற்கான நிபந்தனைகளை கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் 2018 ஆம் ஆண்டின் போது குறிப்பிடப்பட்டிருந்த 139 நோயாளர்களுக்காக இருதய சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், மேற்கூறப்பட்ட அறுவைச் சிகிச்சைகளிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 79,996,348 தொகையான வைத்தியசாலைக் கட்டணங்களை அறவிடுவதற்காக நோயாளிகளுடனோ அல்லது அமைச்சுடனோ எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இருதய சிகிச்சைகளிற்காக கட்டணங்களை மீளளிப்பதற்கு விசேட முறைமையொன்று இருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் இனங்கப்பட்டவாறு சுகாதார அமைச்சின் சட்டப்பிரிவிற்கு புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று வரையப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. | கட்டணங்களை அறவிடவது தொடர்பில் அமைச்சுடனோ அல்லது நோயாளியுடனோ உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் இது தொடர்பில் விசேட முறைமையொன்றை அறிமுகஞ் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களுடன் ஈடுபடுத்தப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் 36 வழங்குனர்களிடமிருந்து ரூபா 11,430,048 தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை | உடன்படிக்கைகள் மற்றும் விலைமனுக்களில் தாமதக் கட்டணங்கள் தொடர்பிலான நிபந்தனைகளை உள்ளடக்குவதுடன் நோக்கமானது வழங்குனரை பொருட்களை வேகமாக வழங்குகவதற்கு கட்டாயப்படுத்துவதற்கும் சில தாமதங்கள் ஏற்பட்ட போது தாமதங்களிற்கான காரணத்தை வழங்குவதன் மூலம் காலத்தை நீடிப்பதற்கு பல வழங்குனர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். அத்தகைய சந்தர்ப்பங்களில், வைத்தியசாலை நிர்வாகமானது அத்தகைய காரணங்களின் நியாயத்தன்மையை கருத்திற்கொண்டு மிகுதியாகவுள்ள காலப்பகுதியை வழங்கியிருந்தது. | இரு தரப்பினர்களாலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் விலைமனுக்களில் குறிப்பிடப்பட நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். வழங்குனர்கள் மிகுதி காலப்பகுதிகளிற்காக வேண்டுதல்களை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை தவிர்க்க முடியாத விடயங்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு மிகுதி காலப்பகுதிகள் வழங்கப்பட வேண்டும். அவதானிப்புக்களில் குறிப்பிட்ட அறவிடப்பட்டிருக்காத தாமதக் கட்டணங்களிற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்காததுடன் தாமதக் கட்டணங்களை அறவிடுவதை தவிர்த்து உத்தியோகத்தர்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட வேண்டும். இல்லையேல் இது அவர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டில் ரூபா 23,544,099 இல் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ கழிவு எரியூட்டிகள் வைத்தியசாலைகளின் உத்தியோகத்தர்களுக்கு வசதியளிக்காத வகையில் ஒரு இடத்தில் பொருத்தப்பட்டிருந்தது. முறையான உடன்படிக்கையொன்றில் எடுபடாமல் இயந்திரமானது வெளிநிறுவனமொன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் சிகிச்சைக் கழிவுகளானது இயந்திரத்தின் அதிகூடிய இயலுமையை மிஞ்சி எரிக்கப்பட்டது. எனினும் இது தொடர்பில் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாளொன்றிற்கு எரிக்கப்பட்ட வேண்டிய சிகிச்சை கழிவுகளின் தொகை இயந்திரமானது விளைவற்றதாகவிருக்க வேண்டிய நேரம் போன்ற நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அதனால், சிகிச்சைக் கழிவு செயற்பாடு தொடர்பாக முறையான மேற்பார்வையை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. எதிர்காலத்தில் தேவையான படிமுறைகளிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இயந்திரத்தின் அதிகூடிய இயலுமையை விஞ்சி சிகிச்சை கழிவுகளை எரிக்காமலிருப்பதற்கும் இயந்திரத்தை முறையாக பேணுவதற்குமாக நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கையை மீளத் திருத்திய பின்னர் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். வைத்தியசாலையின் உத்தியோகத்தரின் வசதியின்மையை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வைத்தியசாலையினை சுத்திகரிப்பதற்கான ஒப்பந்தம் அரச பெறுகை வழிகாட்டி மற்றும் பெறுகை செயன்முறையின் வெளிப்படு தன்மையை நிரூபிக்காமல் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 01 இலிருந்து 15 மாதங்கள் காலப்பகுதிக்கு வருமானமொன்றிற்கும் ரூபா 3,652,600 தொகையுடன் 2018 நவம்பர் 01 இலிருந்து 01 வருட காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு ரூபா 5,524,830 தொகையையும் செலுத்துவதற்கு இணங்கப்பட்டது. ஒப்பந்த | சுத்திகரிப்பு முறையாக நடைபெற்றிருக்காதமை மற்றும் போதியளவு ஊழியர்கள் இல்லாமல் இருந்தமை போன்ற காரணங்களுக்கான தண்டப்பணங்களுக்கு முறையான முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அதற்கிணங்க தண்டப்பணங்களை அறிவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரச கொள்வனவு வழிகாட்டியை மீறி வழங்குனர்களை தெரிவு செய்தமைக்கும் பெறுகைச் செயன்முறைகளின் வெளிப்படுதன்மையை உறுதிப்படுத்தாமைக்காகவும் தண்டப்பணத்தை ரூபா 1,175,335 ஆல் குறைப்பதற்கு கட்டளை வழங்கியமைக்கும் முறையான புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்காலத்தில் அந்த நிலைமைகளை |

| | | | |
|---|---|---|---|
| | நிபந்தனைகளின் பிரகாரம் சுத்திகரிப்பு நடைபெற்றிருக்காதமையாலும் சேவையில் தேவையான அளவு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்காமையாலும் ரூபா 2,352,750 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென உத்தியோகத்தர்கள் கணிப்பிட்டிருந்த போதும், பணிப்பாளர் எந்தவொரு நியாயப்படுத்தல்களையும் சமர்ப்பிக்காமல் அந்த தண்டப்பணத்தை ரூபா 1,175,335 ஆல் குறைப்பதற்கு கட்டளையிட்டார். | | முடிந்தளவு தவிர்ப்பதற்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் நுட்பங்கள் ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். தேவையான அளவு ஊழியர்கள் சுத்திகரிப்பு ஈடுபடாமையால் அச்சேவையானது முறையாக மேற்கொள்ள முடியாமை இருந்தமையால் தண்டப்பணங்களை அறவிடுவதை விட தேவையான அளவு ஊழியர்களை ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டியின் வழிகாட்டிகளை மீறியும் பெறுகை செய்முறையின் வெளிப்படுதன்மையை நிரூபிக்காமலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து தடையிடல் முறையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 10 மில்லியன் நிதி எல்லையை மீறி வரும் 2018 மார்ச் 27 இல் ரூபா 16,642,700 இல் ஐந்து கண்டறியும் அறுவைச் சிகிச்சை கருவிகள் மற்றும் மூக்கு மற்றும நானி சிகிச்சை 0° மற்றும் 30° தொலைநோக்கிகள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யப்பட்டது.<br><br>உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனு கோரப்பட்டிருக்காத போதிலும்,ரூபா 13,892,700 இல் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்புரைகளின் போது நிபந்தனைகளின் பிரகாரம் பெறப்பட்டிருக்க வேண்டிய 2 வருட உத்தரவாத காலப்பகுதிக்கு பதிலாக ஒரு | 6 தொலை நோக்கிகளுக்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3 மில்லியன் கணிப்பிட்டு கடையிடல் முறைமையின் கீழ் விலைமனு கோரப்பட்டது. தொழில்நுட்ப குழுவால் மேலதிக பொருட்களை வாங்குவதற்கு முயற்சி செய்த போது நிதிப்பெறுமதி அதிகரித்ததுடன் விலைமனுக்கள் வரையப்பட்ட போது உபகரணங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து உதிரிப்பாகங்களும் விதப்புரைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2 பிரதான விடயங்களின் விலையை குறிப்பிடுவதற்கு அனுமதித்திருந்த போதிலும் விலைப்பட்டியல் சமரப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அதற்கிணங்க, விலைமனுதாரர், மேலதிக விடயங்களாக உதிரிப்பாகங்களின் விலைகளை சமர்ப்பித்திருந்ததுடன் இது வரைதலுக்கு காலதாமதட் ஏற்பட்டமையால் ஏற்பட்டது. | அரச பெறுகை வழிகாட்டியை மீற வழங்குனரை தெரிவு செய்தமைக்கும் பெறுகை செய்முறையின் வெளிப்படுத்தல் தன்மையை நிரூபிக்காமைக்கும் முறையான புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். 2 வருடங்கள் உத்தரவு காலப்பகுதியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மற்றும் 2 வருட உத்தரவாத காலப்பகுதியை கருத்திற்கொள்ளாமல் பணத்தை செலுத்துவதற்கு தவறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொழில்நுட்ப விதப்புரைகளின் பொது நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வருட உத்தரவு காலப்பகுதி மாத்திரம் பெறப்பட்டிருந்தது. தொழில்நுட்ப விரிவுரைகளின் குறிப்பிட்ட கட்டாய விலையை சமர்ப்பிக்காத விலைமனுதாரர் விலைகளை மதிப்பீடு செய்யும் போது நிராகரிக்கப்பட வேண்டும். ஒப்பந்தமானது அவ்வாறு செய்யாது அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | 2 வருட உத்தரவாத காலப்பகுதி வேண்டப்பட்டிருந்த போதிலும், ஒரு வருட காலப்பகுதி மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு இதற்கு அதிகாரமளித்திருந்தது. |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பயிற்சி பட்டறை மற்றும் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் 05 வருடங்களுக்குரிய ஒப்பந்தக்காரர்களின் நிதிநிலைமையை பரீட்சிக்காமல் ரூபா 87,019,408 இற்காக 2016 நவம்பர் 09 இல் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்குரிய திகதியானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 மாதங்களால் உடன்படிக்கையின் பிரகாரம் காலதாமதமாக்கப் பட்டிருந்தது. அந்த நேரத்தில் பூர்த்திசெய்யப்பட்ட வேலையின் பெறுமதி மொத்த ஒப்பந்த பெறுமதியில் 26 சதவீதமாகும். ரூபா 16,675,082 ஆரம்ப முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 5,219,979 தொகை மாத்திரம் 2018 ஏப்ரல் 17 அளவில் அறவிடப்பட்டிருந்தது. ரூபா 4,350,969 தாமதக் கட்டணங்கள் ஒப்பந்த | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்தை முடிப்பதற்கான திகதி 8 மாதங்களால் தாமதமாக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தமானது இன்று வரை 75 சதவீதத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 4,350,969 தொகையான அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களில் ரூபா 1 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மிகுதியை எதிர்கால கொடுப்பனவுகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கபடும். பதினான்கு கொள்கலன்கள் பயிற்சிப் பட்டறை மற்றும் ஆண் தாதிகளின் விடுதிகளை கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை நடாத்துவதற்குமாக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தை வேகமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மிகுதி தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முன்னைய 5 வருட ஒப்பந்தகாரர்களின் நிதி நிலைமையை பரீட்சிக்க ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர் களிடமிருந்து மேலதிக கிரயத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. உரிய பயிற்சிப் பட்டறை மற்றும் அலுவலகங்கள் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யாமையால் ரூபா 3,015,000 தொகையை செலவழித்து 2018 ஆம் ஆண்டில் 14 கொள்கலன்களில் நடாத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ரூபா 59,808,300 கிரயத்தில் 2017 பெப்ரவரி 16 இல் ஆண் தாதிகளிற்காக விடுதிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த திகதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களால் காலதாமதமாக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதியில் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதியானது 9 சதவீதமாகவிருந்தது. ரூபா 11,257,340 பெறுமதியான ஆரம்ப முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,130,438 தொகை மாத்திரம் 2019 மார்ச் 09 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்தது. நிர்மாணங்களை பூர்த்தி செய்யாமையால் ரூபா 1,218,397 தொகையொன்று வாடகை, நீர் மற்றும் மின்சாரமாக செலுத்தி 2018 திசெம்பர் வரை 22 மாதங்களிற்காக வதிவிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டது. | ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களால் காலதாமதமாக்கப்பட்டது. வைத்தியசாலை முகாமைத்துவத்தால் எச்சரிக்கை வழங்கப்பட்ட பின்னர் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் புதிய உப ஒப்பந்தத்தின் கீழ் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை ஆண் தாதிகளிற்காக பெற்ற வதிவிடத்திற்காக வாடகை, மின்சார பட்டியல்கள் செலுத்த வேண்டியுள்ளது. | ஒப்பந்தக்காரரிடமிருந்து விரைவாக வேலையை பூர்த்தி செய்யச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வைத்தியசாலைகளின உத்தியோகத்தர்களின் பதவிகளிற்காக ஆட்சேர்த்தல் தரப்படுத்தல் மற்றும் பதவியுயர்வு போன்றவற்றிற்காக முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுர்த்தல் செய்முறையை தயாரித்து 2018 திசெம்பர் 31 வரையிலும் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்கட்டமைப்பிற்கான பிரேரணை 2012 ஆம் ஆண்டிலிருந்து முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. வருகின்ற 2 மாதங்கள் காலப்பகுதியினுள் திருத்தங்களுடன் பிரேரணையை மீளச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்த்தல் செய்முறையை தயாரித்து அனுமதி பெறுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமியில்லாமல் சபையின் செயலாளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர்களிற்காக பதவியொன்று உருவாக்கப்பட்டதுடன், பெண் உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.பட்டியலிட்டவாறு வருகை மற்றும் வெளிச்செல்கைகளை நிரூபிப்பதற்கு 08 மாத காலப்பகுதிக்கான ஆவணங்கள் பராமரிக்காமையால் ரூபா 899,563 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. சேவைக்கு வருகை தர வேண்டியிருந்த 129 நாட்களில் 47 நாட்கள் வராதமையை கருத்திற் கொள்ளாமல் பராமரிக்கப்படிருந்த 11 மாத வருகைக்கு ரூபா 1,247,657 மொத்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பல சந்தர்ப்பங்களில் அவள் மந்தமான வருகைக்காக எச்சரிக்கப்பட்டிருந்தாள். ஆனால் அவள் சாதகமாக பதிலளிக்கவில்லை. ஆகையால், சபையின் தீர்மானத்தின் மீது சொல்லப்பட்ட பதவிக்கு வேறொரு நபரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் அந்தப் பதவிகளிற்காக பதவிகளை தயாரிப்பதற்காக மற்றும் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |